நடவடிக்கையெடுக்க வேண்டும். நல்ல திட்டங்களை பெண்களுக்கென்று அறிவித்து, ஆண்களுக்கு சமமான உரிமையென்று கொண்டு வந்திருக்கிற நம்முடைய அரசு பாகுபாடு காட்டாமல், நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நோக்கத்தில் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, வினாவையும் எழுப்பி, விளக்கத்தையும் அவரே தந்திருக்கிறார். காவல் துறை அங்கே வெறுமனே இருக்கவில்லை என்பதையும் காவல் துறை விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இருக்கிறது என்பயையுதம் அந்தக் குற்றவாளி சுட்டிக்காட்டிய இன்னும் 2, 3 பேர்களை கைது செய்யவில்லை என்பதையும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் முன் ஜாமீன் எடுத்துவிட்ட காரணத்தால் ஒருவேளை கைது செய்யப்படாமல் இருக்கலாம். உறுப்பினர் அவர்கள் இங்கே அளித்த இந்தத் தகவலின் அடிப்படையில் மாவட்ட காவல் துறையோடு நம்முடைய காவல் துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். நானும் அதற்கான முயற்சிகளை எடுப்பேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) பேராவூரணித் தொகுதியில் தெருவிளக்கு இரும்புக் கம்பங்கள் பல துருப்பிடித்துள்ளதால் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமை இருப்பது குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணி தொகுதி எல்லைக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட தெரு விளக்குக் கம்பங்கள் துருப்பிடித்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

1990 சனவரி, 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அறிக்கை.

பேராவூரணி பகுதியில் தெருவிளக்கிற்காக நடப்பட்டு அடியில் துருப்பிடித்த இரும்புக் கம்பங்கள் அவ்வப்போது மாற்றப்படுகின்றன. அல்லது துருப்பிடித்துள்ள பாகங்களில் இரும்புத் துண்டுகள் வைத்து வெல்டிங் செய்து வலுவூட்டப் படுகின்றன. ஆபத்தான நிலையில் உள்ள கம்பங்களுக்கு அவ்வப்போது மேற்கண்டவாறு நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுகிறது. மற்றும் 42 மின் கம்பங்களின் நிலையை ஆய்வு செய்து அவைகளை மாற்றுவதற்கு ரூ. 42,000 செலவில் மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவைகளில் மிகவும் பழுதான ஆறு கம்பங்கள் உடனடியாக ஜனவரி முதல் வாரத்தில் மாற்றப்பட்டுவிட்டன. மற்றவை களை 28—2—1990க்குள் மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. தேவையான நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்படுவதால் மக்களிடையே பீதியும் அச்சமும் எழும் நிலை இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் பேராவூரணி பேரூராட்சி மன்றத்தைச் சார்ந்த மின்துறை ஊழியர் ஒருவர், இதுபோன்று அடியில் துருப்பிடித்த அபாயகரமாக இருந்த ஒரு மரத்தில் ஏறி, லைட் போடுகிறபோது, அந்த மரமே கீழே விழுந்து அவருக்கு கால் ஒடிந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஆபாயகர மான சூழ்நிலை இருக்கிறது. இதுபோல என்னுடைய தொகுதியில் பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிகளில் எல்லா கிராமங்களிலேயும் நூற்றுக்கணக்கான இரும்பு கம் பங்கள் துருப்பிடித்து அபாயமான நிலையில் இருக்கின்றன. அதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உரிய நட வடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரி வித்து, மீண்டும் இங்கே கம்பங்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக சொல்லப்பட்டு இருக்கிறது. 126 கம்பங்கள் துருப்பிடித்து இருக்கின்றன. அதை உடனடியாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பாரா ?

11.40 மணி

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ளபடி 126 கம்பங்கள் அங்கே இருப்பது உண்மை. அதிலும் மிகவும் மோசமாக இருந்த 6 கம்பங்கள் உடனடியாக மாற்றப்பட்டு இருக்கின்றன. அதிலேயும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்களுடைய இல்லத்திற்கு எதிரிலேயே இருந்த

கம்பம் மிகவும் மோசமாக இருந்தது. அவருடைய நன்மையைக் கருதி, அது முதலிலே மாற்றப்பட்டது. அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, எல்லாக் கம்பங்களையும் மாற்றுவதற்கு 42 ஆயிரம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டு பிப்ரவரி 28-ஆம் தேதிக்குள் வேலைகளை முடிக்கவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவான நடவடிக்கை எடுத்ததற்காக மின்சாரத்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு முதலவர் அவர்களுக்கு நன்றி சொல்கிற வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய், அவர்கள் இறந்து போனால், அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிககின்ற சட்டத்தை இன்று கொண்டுவருகிறார்கள். இன்று நாம் பதவியேற்று, 27-ஆம் தேதி—ஓர் ஆண்டு நிறைவுபெற்று, சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகியுள்ள நாம், பணியாற்றுகிற இந்த நேரத்தில், இன்று ஒரு மகிழ்ச்சியான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நம்முடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால், 50 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு அரை லட்சியமதான். ஆனால் நம்முடைய லட்சியம் லட்சம். எனவே இந்த லட்சத்தை வருகின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நம்முடைய கலைஞர் அவர்கள் நிச்சயமாக லட்சமாகக் கொடுக்க லட்சியம் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால், இது இந்திய வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விஷயம். முக்கியமான ஒரு கால கட்டத்தில் எந்த ஒரு அரசும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு சலுகையைச் செய்யவில்லை. நம்முடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த லட்சத்தை வருகின்ற சட்டமன்றக் கூட்டத்திலே லட்சியமாக அறிவிப்பதற்கும், இன்னும் பல கோரிக்கைகளை செய்வதற்கும், நம்முடைய முதல்வர் அவர்கள் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி உணர்வோடு, நன்றி நன்றி என்று தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னுடைய லட்சியம், உறுப்பினர் திரு சிங்காரம் அவர்கள் நீண்டகாலம், பல ஆண்டுகாலம், பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழவேண்டும் என்பதுதான் என்னுடைய லட்சியம். (சிரிப்பு).